ரேவதி கேசவமணி

நடனத்துக்குப் பின்

லியோ டால்ஸ்டாய்


ரேவதி கேசவமணி
ALIEN BOOKS


நடனத்துக்குப்
பின்
லியோ டால்ஸ்டாய்

நடனத்துக்குப் பின்

(After The Dance)

லியோ டால்ஸ்டாய்

தமிழில்:

ரேவதி கேசவமணி

Natanathukku Pin

Written by: Leo Tolstoy

English Translation by: Aylmer and Louise Maude

Translated In Tamil by: Revathi Kesavamani

Published by

A L I E N B O O K S

Revathi Kesavamani ©

First Edition: July 2019

This book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than in which it is published and without a similar condition including this the rights under copyright reserved above, no part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise), without prior written permission of both the copyright owner and the above mentioned publisher of this book.

முன்னுரை

மனித வாழ்வை நடத்துவன சூழ்நிலைகளா இல்லை தற்செயலாய் நிகழும் சம்பவங்களா எனும் கேள்வியை முன்னிருத்தி நடனத்துக்குப் பின் என்ற கதையைப் படைத்துள்ளார் லியோ டால்ஸ்டாய். இந்தக் கருத்தே நமக்கு முரண்பாடாகத் தெரிகிறது. சூழ்நிலைகள் வேறு தற்செயலாய் நிகழும் நிகழ்வுகள் வேறா என்ற கேள்வி நமக்குள் எழுகிறது. நாம் சிந்தித்துப் பார்க்கும்போது அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் யோசித்துப் பார்த்தால் இதில் நுட்பமான ஒரு கருத்து சூட்சுமமாக ஒளிந்திருக்கிறது.

சூழ்நிலை என்பது இந்த உலகம் முழுதும் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு நிகழ்வு. சதா நம்மைச் சுற்றி இந்த நிகழ்வு நடந்தபடியிருக்கிறது. அதில் நாம் பங்கெடுக்காத வரை அவைகள் நம்மை பாதிப்பதில்லை. அதில் நாம் பங்கெடுத்துவிட்டாலோ, அதன் விளைவு எத்தகையதாக இருக்கும் என்பதை நாம் தீர்மானிக்கமுடியாது. எனவே நம்மைச் சுற்றி நிகழும் சூழ்நிலையில் நாம் நுழையும்போதுதான் அதன் விளைவுகள் நம்மை பாதிக்கின்றன. அந்தச் சூழ்நிலைகளில் நாம் விழுவது தற்செயலாகத்தான் நிகழ முடியும். திட்டமிட்டோ அல்லது வேறு சாத்தியங்களாலோ அதில் நாம் பங்கெடுக்க முடியாது.

கதைசொல்லியாக வரும் வாசிலிவிச் கதையின் ஆரம்பத்திலேயே இக்கருத்தை சொல்லித்தான் தன் கதையைச் சொல்கிறான். அழகான ஒரு பெண்ணுடன் நடன அரங்கத்தில் நடனமாடுகிறான். அவள் அழகு அவனை காதல் வசப்படவைக்கிறது. அவள் தந்தை அவளுடன் நடனமாடுவதையும் பார்க்கிறான். பிறகு நெடுநேரம் கழித்து வீடு திரும்புகிறான். அடுத்த நாள் காலை வெளியே செல்கிறான். சாலையில் அந்த பெண்ணின் அப்பாவான கர்னல் ஒரு கைதியை அடித்து இழுத்து வருவதைப் பார்க்கிறான். அடி தாங்காமல் கைதி வேதனையில் கதறுகிறான். இதனால் பாதிக்கப்படும் அவன் மனதில் அந்த பெண்ணை நினைக்கும்போதெல்லாம் அவள் அப்பாவின் நினைவும் வந்து அவனை

இம்சிக்கிறது. எனவே அந்த பெண்ணைப் பார்ப்பதைத் தவிர்க்கிறான். அவன் காதலும் மடிந்துபோகிறது.

தான் பார்த்த அந்தக் காட்சி தன் வாழ்வை மாற்றிவிட்டதாகச் சொல்லி கதையை முடிக்கிறான் அவன். சாலையில் அந்தக் கைதியை அடித்து இழுத்துச் செல்வது அவனைச் சுற்றி நிகழும் சூழ்நிலை. ஆனால் அந்த காலையிலேயே அவன் அங்கே வந்து அதைப் பார்க்கும்படி நேர்ந்தது ஒரு தற்செயல் நிகழ்வு. அந்த நிகழ்வில் அவன் பங்கெடுத்துக்கொண்டதாலேயே அவனுக்கு அவ்வாறு நேர்கிறது.

மேலும் இந்தக் கதையில் வேறோர் செய்தியும் நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது. அந்தக் கைதி அடிபடுவதைக் காணமுடியாமல் அவன் தவிக்கும்போது அவன் மனதில், ‘கர்னலுக்குத் தெரிந்திருப்பது எனக்குத் தெரிந்திருந்தால் நான் கண்டதைப் புரிந்து கொண்டிருப்பேன், அது எனக்குத் துன்பமளித்திருக்காது’ என்று நினைக்கிறான். அது என்ன என்ற கேள்வி நமக்கு எழுகிறது. மனித வாழ்க்கையில் எல்லாவற்றிலும் இரட்டைகள் இருக்கின்றன. அன்பு என்றால் கோபமும் இருக்கவே செய்யும். பகைக்கு நட்பும் இருக்கும். இந்த இரண்டுக்கும் இடையே வாழ்க்கையை சமன் செய்து நடத்தவேண்டும். ஏதோ ஒரு பக்கமாகச் சார்ந்திருக்கும்போதுதான் நமக்குத் துன்பம் வருகிறது. இதை வாசலிவிச் அறியவில்லை. ஆனால் அந்தக் கர்னல் அறிந்திருக்கிறார். அவரால் நடன அரங்கத்தில் நடனமாடவும் முடிகிறது. வெளியே ஒரு கைதியைத் தண்டிக்கவும் முடிகிறது.

அன்புடன்,

ரேவதி கேசவமணி

நடனத்துக்குப் பின்

“… அப்படியானால் ஒரு மனிதன் எது நல்லது எது கெட்டது என்பதை அவனாகவே புரிந்துகொள்ள முடியாது என்கிறீர்கள். அவனைச் சுற்றியிருக்கும் சூழ்நிலையே அவனை விழுங்கிவிடுகிறது என்கிறீர்கள். ஆனால் நான் அனைத்தும் வாய்ப்பினால் நிகழ்கிறது என நம்புகிறேன். என்னுடைய வாழ்க்கையை எடுத்துக்கொள்ளுங்கள்…”

இவ்வாறு நமது அருமையான நண்பர் இவான் வாசிலிவிச், ஒரு மனிதன் வாழும் சூழ்நிலையை மாற்றாமல் அவனுடைய தனிப்பட்ட நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது சாத்தியமற்றது என்று எங்களுக்கிடையே நடந்து கொண்டிருந்த உரையாடலின் போது சொன்னார். உண்மையில் யாருமே ஒரு மனிதன் அவனாகவே நல்லது கெட்டதை புரிந்துகொள்ள முடியாது என்று சொல்ல முடியாது என்றாலும், இவான் வாசிலிவிச் இவ்வாறாக பதில் சொல்வது அவருடைய மனத்தில் எழுகின்ற எண்ணங்களால்தான். அந்த எண்ணங்களை விவரிக்க அவர் தனது வாழ்க்கையில் நடந்த ஏதேனும் ஒரு சம்பவத்தை அதனோடு தொடர்புபடுத்திக் கூறுவது அவருடைய பழக்கம். அவர் பலமுறை தான் எதற்காக அந்தக் கதையைச் சொல்லவந்தோம் என்பதையே மறந்துவிடுவார் என்றாலும் அவர் அவற்றை மிகவும் அக்கறையுடனும் உணர்ச்சிகரமாகவும் சொல்வார்.



இப்போதும் அவர் அவ்வாறே சொன்னார்.



இப்போதும் அவர் அவ்வாறே சொன்னார்.

“என்னுடைய வாழ்க்கையை எடுத்துக்கொள்ளுங்கள். என்னுடைய முழு வாழ்க்கையும் தீர்மானிக்கப்பட்டது, சூழ்நிலையால் அல்ல ஆனால் அது முற்றிலும் வேறானது.”

“அது எப்படி, என்ன?” நாங்கள் கேட்டோம்.

“ஓ, அது ஒரு நீண்ட கதை. நீங்கள் புரிந்துகொள்ளும் பொருட்டு நான் பலவற்றை உங்களுக்குச் சொல்லவேண்டும்.”

“நல்லது, அப்படியே சொல்லுங்கள்.”

இவான் வாசிலிவிச் சற்று யோசித்தார், தனது தலையை அசைத்தார்.

“என்னுடைய முழு வாழ்க்கையும்” என்ற அவர், “ஒரே ஒரு இரவில் அல்லது ஒரே காலையில் மாறியது.” என்றார்.

“ஏன், என்ன நடந்தது?” எங்களில் ஒருவர் கேட்டார்.

“என்ன நடந்தது என்றால், நான் அளவுகடந்த காதல் வயப்பட்டேன். நான் இதற்கு முன்னரும் பலமுறை காதல் வயப்பட்டிருந்தாலும், இப்போது இது அனைத்தையும் விட தீவிரமானது. இது நடந்து வெகுகாலமாகிவிட்டது. இப்போது அவளுக்குத் திருமணமான மகள்கள் உள்ளனர். அது வர்னிகா பி...” இவான் வாசிலிவிச் அவளுடைய குடும்பப் பெயரைச் சொன்னார். “இப்போது இந்த ஐம்பது வயதிலும் அவள் அபாரமான அழகுடன் இருக்கிறாள். ஆனால் அவள் தனது இளமையில், தனது பதினெட்டாவது வயதில், உயரமாக, மெல்லிய உடல்வாகுடன், அழகாக, கம்பீரமான தோற்றத்துடன் இருந்தாள். கம்பீரம் என்பது சரியான வார்த்தை, ஏனெனில் அவள் தனது உள்ளுணர்வால் எப்போதும் நிமிர்ந்து, தனது தலையை உயர்த்தியிருக்க, அவளுடைய அழகும் உயரமும், அவள் மெலிந்திருந்தபோதும், ராணியைப் போன்ற தோற்றத்தை அவளுக்குக் கொடுத்தது. அவள் முகத்தில் எப்போதுமிருக்கும் மனம்விட்டு நட்போடு கூடிய மந்தகாசமும், ஒளிவீசும் அவளுடைய கண்களும், அவளுடைய இனிமை மிக்க இளமையும் மட்டும் இல்லாதிருந்திருந்தால் அவளை யாரும் நெருங்க முடியாதபடி தடுத்திருக்கும்.”

“என்னவொரு கவர்ச்சிகரமான வர்ணனையைக் கொடுத்தீர்கள் இவான் வாசிலிவிச்!”

“வர்ணித்தேன் என்றாலும், நீங்கள் மெச்சும்படியாக, உண்மையாகவே அவளை என்னால் வர்ணிக்க முடியவில்லை. ஆனால் அது முக்கியமல்ல, நாற்பதுகளில் என்ன நடந்தது என்பதைப் பற்றியே நான் சொல்ல வந்தேன். அப்போது நான் மாகாண பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்தேன். அது நல்லதா கெட்டதா என்பது பற்றி எனக்குத் தெரியாது ஆனால் எங்களுக்கு அரசியல் கிளப்புகளோ, பல்கலைக் கழகங்களின் கோட்பாடுகளோ அப்போது எதுவுமில்லை. இளமையான நாங்கள், இளைஞர்கள் எவ்வாறு பொழுதைக் கழிப்பார்களோ அவ்வாறு, படித்துக்கொண்டு மகிழ்ச்சியோடு இருந்தோம். அளவுக்கதிகமான பணமிருந்ததால் நான் கவலையின்றி உல்லசாமாக இருந்து வந்தேன். என்னிடம் நல்லதாக ஒரு குதிரை இருக்கவே அதில் பெண்களோடு சேர்ந்து பனியில் சவாரி செய்தேன். அப்போது பனிச்சருக்கு சாதனங்கள் வந்திருக்கவில்லை. நான் என்னுடைய தோழர்களோடு சேர்ந்துகொண்டு மது விருந்துகளில் கலந்துகொண்டேன். அந்த நாட்களில் நாங்கள் சாம்பெய்ன் இருந்தால் பருகுவோம் இல்லையெனில் ஒன்றும் குடிக்க மாட்டோம். இப்போது போல அப்போது நாங்கள் வோட்கா அருந்தியதில்லை. இரவு விருந்தும் நடனக் கேளிக்கையும் எனக்கு விருப்பமானவைகள். நன்றாக நடனமாடும் நான் அழகற்றவனல்ல.”

“இதில் வெட்கப்பட ஒன்றுமில்லை” என்று அருகிலிருந்த பெண் ஒருத்தி குறுக்கிட்டாள். “நாங்கள் உங்கள் புகைப்படத்தைப் பார்த்திருக்கிறோம், உண்மையில் நீங்கள் அழகற்றவரல்ல! நீங்கள் ஒரு அழகான மனிதர்.”

“நீங்கள் விரும்பினால் நான் அழகானவன் தான். அது ஒன்றும் விசயமல்ல. விழாவின் இறுதி நாளில் அவள் மீதான எனது காதல் வலிமை கொண்டது. அப்போது நான், வயதானவரும் பணக்காரருமான விருந்தோம்பல் குணமிக்க மார்ஷல் ஒருவரின் நடன விருந்தில் இருந்தேன். அவரைப் போலவே நல்ல மனமுடைய அவருடைய

மனைவி விருந்தினர்களை வரவேற்றார்கள். அவர் அடர் பாக்கு வண்ண வெல்வெட்டில் உடை அணிந்து, நெற்றியில் வைரத்தாலான ஆபரணம் தரித்திருந்தார், அவரது குண்டான, பழைய வெள்ளை தோள்களும் மார்பகமும், பீட்டர் பேரரசரின் மகளான எலிசபெத்தின் உருவப்படங்களைப் போலவே வெறுமனே காட்சி தந்தன."

"அது ஒரு உற்சாகமான நடனம். அந்த ஆடம்பரமான அறையில் இசைக் கலைஞர்களுக்கென தனி கூடம் இருந்தது. அந்த நாட்களில் அது மிகவும் புகழ்பெற்றிருந்தது. உணவு வகைகள் அற்புதமாயிருக்க, சாம்ப்பெயின் ஆறாகப் பெருகி ஓடியது. எனக்கு சாம்ப்பெயின் பிடிக்கும் என்றாலும் அன்று இரவு நான் குடிக்கவில்லை ஏனெனில் நான் அதற்குப் பதிலாக காதலைப் பருகியிருந்தேன். வர்னிகாவுடன் சேர்ந்து நடனமாடும் சந்தர்ப்பத்திற்காக நான் குடிப்பதைத் தற்காலிகமாகக் கைவிட்டேன். கால்கள் தளர்ந்து தொய்யும் வரையிலும் என்னால் முடிந்தவரை அவளோடு அனைத்து வகை நடனங்களையும் நான் ஆடினேன். அவள் இளஞ்சிவப்பு நிறச் சட்டையும், வெள்ளைக் காலணிகளும் அவளது மெல்லிய கூர்மையான முழங்கைகளுக்கு எட்டாத குழந்தைகளுக்கான வெள்ளை கையுறைகளுடன், வெண்ணிற ஆடை அணிந்திருந்தாள்."

"ஆனால் அருவருப்பான அனிஷிமோவ் என்ற பொறியாளன் என்னிடமிருந்து மஸூர்கா நடனத்தைப் பறித்து அவளோடு ஆடியதற்கு, அவனை இப்போது கூட நான் மன்னிக்க முடியாது. அவள் வந்த நிமிடத்திலிருந்து தன்னோடு நடனமாடுமாறு அவன் கேட்க, ஒரு ஜோடிக் கையுறைகள் வாங்க நான் சிகை அலங்கார நிபுணரிடம் சென்றதில் பிந்தி விட்டேன். எனவே நான் அந்த நடனத்தை அவளோடு ஆட முடியவில்லை. ஆனால் நான் முன்னர் சற்றே கவனித்து வந்த ஜெர்மானிய பெண் ஒருத்தியோடு நடனமாடினேன் என்றாலும், நான் அவளிடம் அந்த மாலை நேரத்தில் பண்பாக நடந்துகொள்ளவில்லை. நான் அவளிடம் அரிதாகவே பேசினேன் அல்லது அவளைப் பார்த்தேன், வெள்ளை நிற உடையில் உயரமாக, மெல்லிய உருவத்தில் இளஞ்சிவப்பு நிறச் சட்டை அணிந்து ஒளியற்ற மங்கலான முகத்துடன் இருந்த அவளிடம் இனிய கனிவான கண்களைத் தவிர வேறு எதையும்

நான் காணவில்லை. நான் மட்டும் என்றில்லை, அங்கிருந்த அவர்கள் அனைவரும் அவளை மரியாதையுடன் பார்த்தார்கள் என்றாலும், அவள் அங்கிருந்த ஆண்களையும் பெண்களையும் விட பளிச்சென்று இருந்த போதும், அவளைப் போற்றுவதற்கு யாரும் முன்வரவில்லை."

"நான் வர்னிகாவுடைய நடன ஜோடியாக நியமிக்கப்பட வில்லை என்றாலும், உண்மை என்னவெனில் நான் பெரும்பான்மை நேரத்தை அவளுடன் சேர்ந்தே ஆடினேன். என்னைத் தேர்ந்தெடுக்க அவள், வெளிப்படையாகவே அறையின் நீண்ட தூரத்தைக் கடந்து என்னிடம் வந்தாள். நான் என்னைத் தேர்வதற்காகக் காத்திராமல் அவளை எதிர்கொண்டு சென்றபோது, அவள் எனது உள்ளுணர்வுக்கு நன்றி சொல்லி புன்னகைத்தாள். நான் அவளை நடனமாட வேறொருவருடன் விட்டபோதும், அவள் தவறாக யூகித்து மற்றொரு மனிதனைக் கரம்பிடித்தபோதும் அவள் மெலிதாக தோள்களைப் பிடித்தவாறு மற்றவரின் கையை எடுத்துவிட்டு வருத்தத்துடன் என்னைப் பார்த்துச் சிரித்தாள்."

"நான் அவளுடன் வெகுநேரம் நடனமாடி மூச்சிரைத்து சிரித்தபோது அவள் 'மீண்டும்' என்றாள். நான் என்னை மறந்து உடலின் இருப்பையே அறியாதவனாக அவளோடு தொடர்ந்து ஆடினேன்."

"உங்களது கரம் அவள் இடையைச் சுற்றிப் பிடித்திருக்கையில் நீங்கள் எவ்வாறு நினைவில்லாது இருக்க முடியும்? நீங்கள் நிச்சியமாக உங்களை உணர்ந்ததோடு அல்லாமல் அவளையும் உணர்ந்திருப்பீர்கள்" என்றார் கூட்டத்திலிருந்த ஒருவர்.

இவான் வாசிலிவிச் கோபத்துடன் சத்தமிட்டுச் சொன்னான்: “நீங்கள் அங்கே வந்துவிட்டீர்கள், நீங்கள் அனைவரும் நாகரிக உலகைச் சார்ந்தவர்கள்! இன்றைய நாட்களில் நீங்கள் உடலைத் தவிர வேறெதையும் சிந்திப்பதில்லை. ஆனால் அந்த நாட்களில் அப்படியல்ல. நான் எவ்வளவு அதிகமாக காதலில் இருந்தேனோ அந்த அளவிற்கு அவள் தன்னுடைய உடலளவில் என் கண்களுக்குக் குறைவாகவே தென்பட்டாள். இன்றைய நாட்களில் நீங்கள் கால், முழங்கால் என்று நீங்கள் காதலிக்கும் பெண்ணை நிர்வாணமாக்கி விடுகிறீர்கள். என்னுடைய பார்வையில் அல்போன்ஸ் கர் என்ற எழுத்தாளர் சொன்னது போல, ‘நான் காதலிக்கும் ஒருத்தி எப்போதும் வெண்கலத்தாலான ஆடைகளையே தரித்திருக்கிறாள்.’ நாங்கள் அவ்வாறு செய்ய நினைத்ததில்லை; நோவாவின் நல்ல குணமுள்ள மகனைப் போல அவளுடைய நிர்வாணத்தை மறைக்க நாங்கள் முயற்சித்தோம். ஓ! நல்லது, உங்களால் அதைப் புரிந்துகொள்ள முடியாது.”

“நீங்கள் அவரைப் பற்றிக் கவலைப் படாமல் மேற்கொண்டு சொல்லுங்கள்” என்றார் எங்களில் ஒருவர்.

“நான் அவளுடனே வெகு நேரமாக நான் அதிகமாக நடமாடியதில் நேரம் போனதையே நான் கவனிக்கவில்லை. இசைக் கலைஞர் தொடர்ந்து ஒரே மெட்டையே திரும்பத் திரும்ப சோர்ந்து போகும் வரைக்கும் வாசித்தார். அப்படிச் செய்கையில் நடனத்தின் முடிவு எப்படி இருக்கும் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆண்களும் பெண்களும் ஏற்கனவே தங்கள் சீட்டாட்ட மேஜைகளிலிருந்து எழுந்து இரவு உணவிற்காக சாப்பாட்டு அறையை நோக்கிச் செல்ல, வேலைக்காரர்கள் சாமான்களை எடுத்துக்கொண்டு அங்குமிங்கும் ஒடினார்கள். அப்போது சுமார் மூன்று மணி இருக்கும். நான் நடனத்தின் கடைசி நிமிடங்களை அதிகமாகப் பயன்படுத்தி, நான் அவளை மீண்டும் நடனமாடத் தேர்ந்தெடுத்து, நூறாவது முறையாக நாங்கள் அறை முழுவதும் நடனமாடினோம்.”

“உணவுக்குப் பின்னர் ஆடும் நான்கு ஜோடிகளின் நடனம் என்னுடையது” என்று சொல்லி, அவளை அவளிடத்திற்கு கூட்டிச் சென்றேன்.

“நிச்சயமாக, ஆனால் நான் வீட்டிற்குச் செல்லாமலிருந்தாள்” என்று சொல்லி அவள் சிரித்தாள்.

“நான் உங்களை விடப்போவதில்லை” என்றேன் நான்.

“எப்படியிருந்த போதிலும் எனது வசிறியை எனக்குக் கொடுங்கள்” என்றாள் அவள்.

“அப்படிச் செய்தால் நான் மிகவும் வருந்துவேன்” என்ற நான் அவளிடம் ஒரு மலிவான விசிறியைக் கொடுத்தேன்.

“நல்லது, இங்கே உங்களை ஆறுதல் படுத்த ஏதோ ஒன்றிருக்கிறது” என்ற அவள் வசிறியிலிருந்து ஒரு இறகைப் பிடுங்கி என்னிடம் கொடுத்தாள்.

“இறகை வாங்கிய நான், என்னுடைய அன்பையும், ஆனந்தத்தையும் எனது கண்களால் மட்டுமே வெளிப்படுத்தினேன். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்ததோடு கவலையற்றவனானேன். நான் நன்றாக இருப்பதாக, நான் நானாக இல்லாமல், இந்த பூமியைச் சார்ந்தவனாக இல்லாமல், தீமை எதையும் அறியாதவனாக உணர்ந்தேன். அந்த இறகை எனது கையுறையில் மறைத்து வைத்த நான், கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாதவனான அவளை விட்டு அகலாமல் நின்றேன்.

“பாருங்கள், அவர்கள் மீண்டும் நடனமாட அழைக்கிறார்கள்” என்று என்னிடம் சொன்ன அவள் நடன அரங்கிலிருந்த, வெள்ளியிலான தோள்பட்டையுடன் கூடிய ஆடையணிந்து, கதவுக்கருகே சில பெண்களோடு நிற்கும் மிடுக்கான தோற்றமுடைய அவளது தந்தையைச் சுட்டிக்காட்டினாள்.

“வர்னிகா இங்கே வா” என்று வைர அட்டிகை அணிந்த, எலிசபெத்தைப் போன்ற தோளுடைய விருந்தோம்பும் ஒரு பெண் கத்தினாள்.

வர்னிகா கதவை நோக்கிச் செல்ல நான் அவளைத் தொடர்ந்தேன்.

“உன்னுடைய தந்தையை உன்னோடு நடனமாடும்படி சொல்” என்ற அவள் கர்னலிடம், “தயவுசெய்து ஆடுங்கள் பீட்டர் வேல்டிஷ்லோவிச்” என்று சொல்லி அந்தப் பெண் கர்னலை நோக்கித் திரும்பினாள்.

“வர்னிகாவின் தந்தை கட்டுக்கோப்பாக மிகவும் அழகாக இருந்தார். அவர் நல்ல நிறத்தோடு, நிக்கோலஸ் பாணியில் சுருண்ட மீசையும் அதற்கு ஏற்றாற்போல கிருதாவும் வைத்திருந்தார். அவருடைய முடி அவருடைய நெற்றிக்கு இழுத்துவிட்டிருக்க, அவரது மகளைப் போன்றே பளிச்சென்ற புன்னகை அவரது கண்களிலும் உதடுகளிலும் இருந்தது. அவர் அகன்ற ராணுவ மார்போடு அதில் அணிந்திருந்த வேலைப்பாடுகளுடன் கூட, வலிமையான தோள்களோடு, நீண்ட மெல்லிய கால்களோடு இருந்தார். நிக்கோலஸ் உருவாக்கிய விதிகளுக்கு ஏற்ப அமைந்த தீவிர ராணுவ வகையைச் சார்ந்திருந்தார்.”

“நாங்கள் கதவை நெருங்கிய சமயத்தில் அவர் தான் எப்படி நடனமாடுவது என்பதை மறந்துவிட்டதாகச் சொல்லி நடனமாட மறுத்தார். ஆனால் உடனடியாகச் சிரித்த அவர், தனது கையை அழகாக இடது புறம் கொண்டு சென்று, தனது வாளை உறையிலிருந்து உருவி, அருகிலிருந்த ஒரு இளைஞனிடம் ஒப்படைத்து, தனது வலது கையில் கையுறையை மாட்டினார்.”

“ஒவ்வொன்றையும் அதற்கான விதிகளுடன் செய்ய வேண்டும்” என்று சிரித்தவாறு அவர் சொன்னார். அவர் அவரது மகளின் கையை எடுத்து, ஒரு காற்சுற்று சுற்றி, இசைக்காகக் காத்திருந்தார்.

“மஸூர்காவின் முதல் ஒலியில், அவர் ஒரு காலை புத்திசாலித்தனமாக வைத்து மற்றொன்றை முன்னோக்கி நீட்டினார். முதலில் மெதுவாகவும் மென்மையாகவும், பின்னர் மிதமாகவும், உற்சாகமாகவும், கால்களை வைத்ததோடு, பூட்ஸை அழுத்துவதன் மூலம், அவர் தனது உயரமான உருவத்தை அறையின் நீளத்திற்குச் சுழலவிட்டார். அவரோடு சேர்ந்து சுழன்ற வர்னிகா தாளகதியோடும் எளிதாகவும், தனது அடிகளை அருகாகவும் தூரமாகவும் வைத்து, வெள்ளைச் சாட்டின் செருப்பிலிருந்த தனது சிறிய கால்களால் ஆடினாள்.”

“அந்த அறையிலிருந்த அனைவரும் அந்த ஜோடியின் ஒவ்வொரு அசைவையும் கவனித்தார்கள். என்னைப் பொருத்தவரை நான் அவர்களை மதித்ததோடு, அவர்களை வசீரகமான அனுதாபத்துடன் அவதானித்தேன். குறிப்பாக நான் அந்த முதிய மனிதரின் பூட்ஸ்களால் மிகவும் வசீகரிக்கப்பட்டேன். அது நவீனமாக கூர்மையாக இல்லாமல், மலிவான தோலினால் சதுரமாக ராணுவத்தைச் சார்ந்த காலணி தயாரிப்பவதால் தயாரிக்கப்பட்டிருந்தது. தன்னுடைய மகள் நன்றாக ஆடையணிந்து இந்த சமூகத்தில் வெளியே செல்லவேண்டும் என்பதற்காக அவர் நாகரிகமான பூட்ஸ்களை வாங்கவில்லை மாறாக வீட்டில் தயாரித்ததை அணிந்திருந்தார். அவருடைய சதுரமான பூட்ஸ் என் மனதை வசீகரித்தது என நான் நினைத்தேன். அவருடைய நாட்களில் அவர் சிறந்த நடனமாடுபவராக இருந்திருக்க வேண்டும் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனால் இப்போது அவருடைய பருத்த உருவம், அழகாக ஆட அவர் எடுத்து வைத்த அடிகளின் முயற்சிக்குப் போதுமான அளவு ஒத்துழைக்கவில்லை. இருந்தபோதும் அவர் அந்த அறையை இரண்டு முறை சுற்றி வந்தார். முடிவில் தனது கால்களை விரித்திருந்த அவர் உடனடியாக அவற்றை ஒன்றுசேர்க்க முயன்றபோது ஒரு முழுங்காலை மண்டியிட்டு வேகமாகக் கீழே விழுந்தார். அவரைச் சுற்றி அழகாக ஆடிய அவள், சிரித்தபடி தனது ஆடையைச் சரிசெய்து கொண்டபோது அரங்கம் கை தட்டி ஆரவாரம் செய்தது.”

“முயற்சி செய்து எழுந்த அவர், தனது கைகளுக்கிடையே தனது மகளின் முகத்தை வாஞ்சையோடு பற்றி அவளது முன் நெற்றியில் முத்தமிட்ட அவர், நான் அவளுடைய நடன ஜோடி என்ற வகையில் அவளை என்னிடம் அழைத்து வந்தார். நான் அப்படி இல்லை என்றேன். “சரி, பரவாயில்லை. அவளுடன் ஒரு முறை அறையைச் சுற்றி வாருங்கள்” என்ற அவர் சிரித்தபடி, தனது வாளை உறைக்கு மாற்றினார்.”

“முதல் சொட்டு ஊற்றப்பட்டதும் பாட்டிலிலுள்ளவை தயாராகப் பொங்கிப் பெருகுவதைப் போல, வர்னிகாவின் மீதான எனது காதல் விடுதலை

பெற்று முழு வீச்சுடன் வெளிப்பட்டது. அவளைச் சுற்றிய அது இந்த உலகத்தைத் தழுவியது. நான் எலிசபெத் போன்ற தோள்களுடைய பெண்ணையும், அவளுடைய கணவரையும், அவளுடைய விருந்தினர்களையும், அவளுடைய வேலைக்காரர்களையும், ஏன், என்னை எரிச்சலடையச் செய்த பொறியாளர் அனிஷிமோவைக் கூட விரும்பினேன். வரின்காவின் தந்தையைப் பொறுத்தவரை, அவரது வீட்டில் தயாரிக்கப்பட்ட பூட்ஸ் மற்றும் அவளைப் போலவே புன்னகைக்கும் அவர் மீது ஒருவித கனிவை உணர்ந்தேன், அது கிட்டத்தட்டப் பேரானந்தம்."

"மஸூர்கா நடனம் முடிந்த பிறகு அனைவரையும் உணவிற்காக அழைத்தார்கள். தான் மறுநாள் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும் என்று சொல்லி கர்னல் வீட்டுக்காரர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அவர் வர்னிகாவையும் அழைத்துச் சென்றுவிடுவாரோ என்று நான் பயந்தேன். ஆனால் அவள் தனது தாயுடன் தங்கிவிட்டாள்."

“உணவுக்குப் பிறகு நான் சொல்லியபடி அவளோடு நான்கு ஜோடிகள் நடனத்தை ஆடினேன். நான் முன் எப்போதுமில்லாதபடி முடிவில்லாத மகிழ்ச்சியில் திளைத்தேன். அந்த ஒவ்வொரு கணத்தையும் நான் இன்னும் மகிழ்ச்சியாக உணர்கிறேன்.

“நாங்கள் காலைப் பற்றிப் பேசவில்லை. அவள் என்னை நேசிக்கிறாளா என்று நான் என்னிடமோ அல்லது அவளிடமோ கேட்கவில்லை. அந்த அமைதியே நான் அவளைக் காதலிப்பதைச் சொல்வதற்குப் போதுமானதாக இருந்தது. என்னுடைய அளவற்ற ஆனந்தத்திற்கு ஏதேனும் இடையூறு வந்துவிடுமோ என்ற அச்சம் எனக்குள் எழுந்தது.”

“அன்று நான் வீட்டிற்குச் சென்றபோது உறங்குவதற்காக ஆடைகளைக் கழற்றுவது குறித்து யோசிக்காமல், அவள் அவளது வசிறியிலிருந்து கொடுத்த இறகையும், நான் அவளை இறுதியாக வண்டியில் ஏற்றிவிட

முயன்றபோது அவள் என்னிடம் கொடுத்த அவளது கையுறையையும் கையில் வைத்தபடியிருந்தேன். நான் கண்களை மூடாமல் அவற்றையே பார்த்தபடி இருக்கையில், நடனமாடுவதற்கு இரண்டு பேரிடையே என்னைத் தேர்ந்தெடுத்த அவளுடைய உருவத்தைப் பார்த்தேன். நான் எத்தகைய மனிதன் என்பதை அவள் ஊகிக்க முயன்று, அவள் தனது இனிய குரலில், "பெருமை- நான் சொல்வது சரிதானே?" என்று மகிழ்ச்சியோடு சொல்லிய குரல் கேட்கும். உணவருந்தியபோது என்னுடைய மதுக்கிண்ணத்திலிருந்து முதல் மிடரைக் குடித்து, கண்ணாடி வழியாக என்னை நோட்டம் விட்ட காட்சி தெரியும். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக அவள் தனது தந்தையோடு நடனமாடியபடி என்னருகே சருக்கி வந்து, பார்வையாளர்களைப் பெருமிதத்தோடும் மகிழ்ச்சியோடும் பார்த்தபோது அவர்கள் இருவரும் என் உள்ளத்தில் கனிவும் பரிவும் கலந்த உணர்வில் ஒன்றானார்கள்."

"நான் எனது சகோதரன் இறக்கும்வரை அவனோடு சேர்ந்தே வசித்து வந்தேன். வெளியே செல்வதை வெறுத்த அவன், நடனமாடுவதற்குச் சென்றதேயில்லை என்பதோடு, அவன் தனது பல்கலைக்கழகத் தேர்வுக்காகப் படித்துக்கொண்டிருந்தான். அவனுடைய வாழ்க்கை எந்த மாறுதலுமின்றி இருந்தது. நான் அவன் தூங்குவதை பார்க்கையில் அவன் தனது பாதி தலையை தலையணையில் புதைத்தும் மீதியைப் போர்வையால் மறைத்தும் படுத்துக் கொண்டிருப்பான். நான் அவனது அறியாமையின் ஆனந்தத்தைக் கண்டு அவன் மீது பரிதாபம் கொண்ட அன்பு கொண்டிருந்தேன். கையில் மெழுகுவர்த்தியோடு வந்த என்னுடைய வேலைக்காரன் பெட்ருஷா என் உடைகளைக் களைய முயன்றபோது நான் அவனை மறுத்து அனுப்பினேன். அவனது தூக்கக் கலக்கமான முகமும் கலைந்த தலைமுடியும் என்னை ஒரு மாதிரியாக வசீகரித்தது. நான் ஓசை எழுப்பாமல் கால் நுனியில் மெல்ல நடந்து சென்று எனது படுக்கையில் அமர்ந்தேன். நான் அதிக மகிழ்ச்சியில் இருந்ததால் என்னால் தூங்க முடியவில்லை. மேலும் அந்த அறை அதிக வெப்பமுடையதாக இருந்தது. நான் எனது ஆடைகளைக்

களையாமல், வரவேற்பறைக்குச் சென்று எனது மேலங்கியை அணிந்து, முன் வாசல் கதவைத் திறந்து கொண்டு வீதியில் இறங்கி நடந்தேன்."

"நான் நடனத்தை முடித்துத் திரும்புகையில் மணி நான்குக்கு மேலிருக்கும். வீட்டுக்குச் சென்று அங்கு சற்று நேரமிருந்ததில் இரண்டு மணிநேரம் கடந்திருக்கும், எனவே நான் வெளியே சென்ற போது விடியத் தொடங்கியிருந்தது. வழக்கமான பனி சூழ்ந்திருந்த வானிலை இருக்க, பனி உருகிய தண்ணீர் சாலையெங்கும் நிறைந்திருக்க, கூரையிலிருந்து தண்ணீர் சொட்டிக்கொண்டிருந்தது. வர்னிகாவின் குடும்பம் நகரத்தின் முடிவிலிருந்த மிகப்பெரிய தோட்டத்தில், ஒரு பக்கம் ராணுவ அணிவகுப்பு மைதானமும் மறுபக்கம் இளம் பெண்களுக்கான உறைவிடப் பள்ளியையும் கொண்டிருந்தது."

"நான் எங்கள் வெறுமையான சிறிய தெரு வழியாகச் சென்று பிரதான பாதைக்கு வந்தபோது, அங்கு நான் பாதசாரிகளையும் மரங்கள் எற்றப்பட்ட வண்டிகளை வண்டியோட்டிகள் சாலையை நோக்கி ஓட்டிச் செல்வதையும் பார்த்தேன். குதிரைகள் பளபளக்கும் நுகங்களுக்கு அடியில் வழக்கமான வேகத்துடன் செல்ல, அவற்றின் முதுகு வைக்கோல் பாய்களால் மூடப்பட்டிருந்தாலும் தலைகள் மழையால் நனைந்தன. ஓட்டுனர்கள் தங்களது பூட்ஸ் கால்களால் பனிச் சேற்றைத் தெறித்தபடி நடந்து சென்றனர். தெருவின் இருபுறமும் மூடுபனியில் மிக உயரமாகத் தென்பட்ட வீடுகளும் மற்ற அனைத்துமே எனக்கு மிக இனிமையான உணர்வைக் கொடுத்தன."

"நான் தோட்டத்திலிருந்த அவர்கள் வீட்டை நெருங்குகையில், அதன் ஒரு மூலையில், ராணுவ மைதானத்தில், ஏதோ ஒன்று மிகப் பெரியதாக கருப்பாக இருக்க, சிறிய புல்லாங்குழல் போன்ற வாத்திய இசையைத் தொடர்ந்து பேரிகை ஒலி முழங்கக் கேட்டேன். எனது இதயம் முழுவதும் பாடல் நிறைய, நான் நடனத்தின் மெட்டை கற்பனை செய்தேன். ஆனால் இந்த ஓசை இனிமையாக இல்லாமல் மிகவும் கடுமையாக இருந்தது."

“அது என்னவாக இருக்கும்?” என நினைத்த நான் ஓசை வந்த திசையை நோக்கி நடைபாதையில் நடந்து சென்றேன். நான் நூறு அடி தூரம் நடந்ததும், பனி மூட்டத்திடையே இருந்து கருத்த உருவங்களை வேறுபடுத்திப் பார்க்க முடிந்தது. அவர்கள் சிப்பாய்கள். “இது ஏதோ பயிற்சியாக இருக்க வேண்டும்” என்று நினைத்தேன்.

“எனவே நான் அந்த திசையில் தொடர்ந்து அழுக்கான உடையும், தொப்பியும் அணிந்த ஒரு பொற்கொல்லன் ஏதோ ஒன்றை எடுத்துச் செல்ல அவனோடு சென்றேன். நாங்கள் அந்த இடத்தை அடைந்தபோது அவன் எனக்கு முன்னால் சென்றான். கருப்பு நிறச் சீருடையில் இருந்த சிப்பாய்கள் இரண்டு வரிசையாக, ஒருவரை ஒருவர் பார்த்தபடி அசையாமல் நிற்க, அவர்கள் துப்பாக்கிகள் கால்களுக்கிடையே ஓய்விலிருந்தன. அவர்களுக்கும் பின்னால் வாத்தியக் கருவிகள் தொடர்ந்து அந்தக் கடுமையான ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தன.”

“அவர்கள் என்ன செய்கிறார்கள்?” என்று என்னருகே நின்றிருந்த பொற்கொல்லனைக் கேட்டேன்.

“தப்பியோடிய தார்த்தாரியன் என்ற கலகக்காரனை அடித்து இழுத்து வருகிறார்கள்” என்று கோபத்துடன் சொன்ன பொற்கொல்லன், வரிசையின் கடைசியை உற்றுப் பார்த்தான்.

“நான் அதே திசையில் பார்த்தபோது, வரிசைகளுக்கிடையே இருந்து அச்சமூட்டும் ஏதோ ஒன்று என்னை நோக்கி வந்தது. அப்படி என்னை நெருங்கி வந்தது கோடு போட்ட கால்சராய் மட்டும் அணிந்து வெற்றுடம்புடன் வந்த ஒரு மனிதன். அவனை கயிற்றால் பிணைத்து, இரண்டு புறமும் துப்பாக்கி ஏந்திய சிப்பாய்கள் கூட்டி வந்தார்கள். அவனுக்கு அருகில் கோட்டும் தொப்பியும் அணிந்து வந்த ஒரு அதிகாரியின் உருவம் எனக்குப் பரிச்சியமானதாக இருந்தது. அந்த குற்றவாளிக்கு இரு புறமிருந்தும் சரமாரியாக அடிவிழ, அவனுடைய முழு உடலும் தளர்ந்து கீழே விழ, அவனுடைய பாதங்கள் பனியில் இழுபட இழுத்துவந்தார்கள். அவன் பின்புறமாக சரிந்து விழ, அவனைக் கூட்டி வந்தவர்கள் அவனை முன்னோக்கித் தள்ளினார்கள். இப்போது

அவன் முன்னோக்கி விழ, அவர்கள் அவனை தூக்கி நிறுத்த, அவனருகில் அந்த உயரமான அதிகாரி மிடுக்காக நடந்து வந்தார். வெள்ளை நிற மீசையும் இளஞ்சிவப்பு முகமும் கொண்ட அது வர்னிகாவின் தந்தை.”

“ஒவ்வொரு அடிக்கும் அந்த மனிதன் முகத்தைத் திருப்பிக்கொண்டு வலியால் முகஞ்சுளித்தான். பக்கவாட்டிலிருந்து அவன் அடி வாங்கியபோது, அவன் தனது வெள்ளைப் பற்களைக் காட்டி ஒரே வார்த்தைகளைத் திரும்பத் திரும்பத் சொன்னான். அவன் எனக்கு அருகாமையில் வந்தபோதே அவன் என்ன சொல்கிறான் என்பது புரிந்தது. அவன் பேசவில்லை மாறாக, “சகோதரர்களே, என் மீது கருணை காட்டுங்கள். சகோதரர்களே, என் மீது கருணை காட்டுங்கள்” என்று கதறினான். ஆனால் சகோதரர்கள் கருணை காட்டவில்லை. அவர்கள் என்னருகே வந்தபோது, எனக்கு எதிரிலிருந்த ஒரு சிப்பாய் மிடுக்காக அடியெடுத்து வைத்து தனது கைத்தடியை விர்ரென்ற ஓசையுடன் உயர்த்தி அந்த மனிதன் முதுகில் ஓங்கி அடிப்பதைப் பார்த்தேன்.

அந்த மனிதன் முன்புறமாக விழுந்தபோது சிப்பாய்கள் அவனை பின்புறமாக இழுக்க, அடுத்த அடி பக்கத்திலிருந்தும், இன்னோரு அடி பக்கவாட்டிலிருந்தும் கிடைத்தது. அவனைத் தொடர்ந்து நடந்த கர்னல் தனது கால்களையும் பிறகு அந்த மனிதனையும் பார்த்தார். அவர் காற்றை உள்ளிழுத்து, தனது கன்னங்களை உப்ப வைத்து, உதட்டைக் குவித்து காற்றைச் சுவாசித்தார். அவர்கள் நானிருந்த இடத்தைக் கடந்தபோது, அந்த மனிதனின் தண்டிக்கப்பட்ட முதுகைப் பார்த்தேன். அது பல வண்ணத்தில், ஈரமாக, சிவப்பாக, இயற்கைக்கு மாறாக, அது ஒரு மனித உடல் என்பதை நம்புவதற்கு முடியாததாக இருந்தது.”

“ஓ கடவுளே!” என்று பொற்கொல்லன் முணுமுணுத்தான்.

“அவர்கள் அணிவகுப்பு தொடர்ந்து நடந்தது. வாத்தியங்கள் முழுங்க, தொடர்ந்து அந்த மனிதன் மீது அடி விழ, அந்த உயரமான கர்னல் அவனுக்குப் பக்கத்தில் முன்போலவே தொடர்ந்து நடந்து சென்றார்.

திடீரென்று நின்ற கர்னல், வரிசையிலிருந்த ஒரு மனிதனை நோக்கி வேகமாக நடந்து சென்றார்."

"நான் இப்படித்தான் அடிக்கக் கற்றுக் கொடுத்தேனா?" என்ற அவரின் வெறித்தனமான குரல் ஒலித்தது. "இப்படித்தான் அவனை அடிப்பாயா? இப்படித்தானா?" என்ற அவர் தனது வலிமையான கரத்தால், மெலிந்த,

வெளுத்துப்போன. பயத்திலிருந்த ஒரு சிப்பாயை, அவன் அந்த மனிதனைப் போதுமான வேகத்துடன் அடிக்கவில்லை என்பதற்காக, ஓங்கி அறைவதைப் பார்த்தேன்."

"வேறு தடி கொண்டு வாருங்கள்" என்று கத்தியவாறு சுற்றிலும் பார்த்த அவர் என்னைக் கண்டார். என்னைக் கண்ட அவர் என்னைக் கண்டு கொண்டதற்கான அடையாளம் ஏதுமின்றி மூர்க்கமான கோபத்தோடும் வேகத்தோடும் திரும்பிக் கொண்டார். நான் மிகவும் அவமானம் அடைந்தவனாக எங்கே பார்ப்பது என்று தெரியாமல் வெட்கப்பட்டேன். ஒரு தேவையற்ற இடத்தில் கண்ட ஒரு அசூசையான பொருளைப் போல நான் உணர்ந்தேன். என் கண்களைத் தாழ்த்திய நான் அங்கிருந்து வேகமாக வீட்டுக்குத் திரும்பினேன். வழியெங்கும் அந்த வாத்தியங்களின் இடைவிடாத ஓசை என் காதுகளை நிரப்பியது. "சகோதரர்களே, என் மீது கருணை காட்டுங்கள்" "உனக்கு அவனைச் சரியாக அடிக்கத் தெரியாதா?" என்ற சொற்களை நான் திரும்பத் திரும்பக் கேட்டேன். என் இதயம் முழுவதும் வெறுப்பு நிறைந்திருக்க, நான் ஏதோ வியாதியால் பீடிக்கப்பட்டவனாக உணர்ந்தேன். வழியெங்கும் பலமுறை நின்ற நான், கண்ணால் கண்டவை அனைத்தும் என்னை உண்மையிலேயே ஒரு நோயாளியாக்கி விட்டதாக உணர்ந்தேன். நான் எப்படி வீட்டுக்குத் திரும்பி படுக்கையில் படுத்தேன் என்பதே எனக்கு நினைவில்லை. ஆனால் நான் தூக்கத்தில் ஆழ்ந்த சமயத்தில் நான் கண்டவற்றையே மீண்டும் மீண்டும் திரும்பக் கண்டும் கேட்டும் திடுக்கிட்டு எழுந்தேன்."

"உண்மையில் எனக்குத் தெரியாத ஏதோ ஒன்று அவருக்குத் தெரிந்திருக்கிறது" என்று கர்னலைப் பற்றி எண்ணினேன். "அவர் அறிந்ததை நானும் அறிந்திருந்தால் நிச்சயமாக நான் பார்த்ததைப் புரிந்து கொண்டிருப்பேன்; அது அத்தனை அதிகமாக என்னை இம்சித்திருக்காது."

"ஆனால் நான் அதைப் பற்றி எவ்வளவுதான் யோசித்தும் கர்னல் அறிந்தது என்னவாக இருக்கும் என்று என்னால் புரிந்துகொள்ள

முடியவில்லை. அன்று மாலை வரை நான் உறங்கவில்லை, அதன் பிறகு என்னுடைய நண்பனோடு சேர்ந்து மதுவருந்திய பின்னரே உறங்கினேன்."

"நான் பார்த்த காட்சி பயங்கரமானது என்ற முடிவுக்கு நான் வந்துவிட்டேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படி இல்லை. இவையெல்லாம் ஒரு முடிவோடு செய்யப்பட, அதை அவசியம் என ஒவ்வொருவரும் தீவிரமாக உணர்ந்திருக்கிறார்கள் என்றால் சந்தேகமின்றி நான் அறியாத ஒன்றை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். இவ்வாறு நினைத்த நான் அதைப் புரிந்துகொள்ள முயன்றேன். ஆனால் அப்போதும் சரி அதற்குப் பிறகும் சரி என்னால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் அதை கிரகிக்க முடியாததால் ராணுவத்தில் மட்டுமல்ல பொதுத் துறை சேவையிலும் என்னால் நுழைய முடியவில்லை. எனவே நான் எதற்கும் பயனற்றுப் போனேன் என்பதை நீங்களே பார்க்கிறீர்கள்."

"ஆமாம். நீங்கள் எவ்வாறு பயனற்றுப் போனீர்கள் என்பதை நாங்கள் அறிவோம்" என்று எங்களில் ஒருவர் சொன்னார். "ஆனால் அதற்கு மாறாக நீங்கள் மட்டும் இல்லாவிட்டால் எத்தனை பேர் பயனற்றுப் போயிருப்பார்கள் என்று சொல்லுங்கள்."

"ஓ. அது சுத்த முட்டாள்தனம்" என்று இவான் வாசிலிவிச் நியாயமான கோபத்துடன் சொன்னான்.

"சரி. அந்த காதல் விவகாரம் என்ன ஆயிற்று?"

"என்னுடைய காதல்? அந்த நாளிலிருந்து அது குறைந்து விட்டது. அவளுடைய நினைவு எப்போது வருகிறதோ அப்போதெல்லாம் எனக்கு உடனடியாக மைதானத்தில் கர்னல் நடந்துகொண்ட முறை நினைவுக்கு வரும். உடனே நான் அருவருப்பாக அசௌகரியமாக உணர்வேன் என்பதால் அவளைப் பார்ப்பதை மெல்ல மெல்லக் குறைத்துக் கொண்டேன். எனவே எனது காதல் ஒன்றுமில்லாமல் போனது. ஆமாம், சந்தர்ப்பம் ஒரு மனிதன் வாழ்க்கையை முற்றாக மாற்றி

வழிநடத்துகிறது” என்று முடிவாக அவன் சொன்னான். “ஆனால் நீங்கள் சொல்கிறீர்கள்…?”